www.Padasalai.Net www.CBSEtips.in

V10S

## விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
## அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

வகுப்பு 10

நேரம்: 2.30 மணி  அறிவியல்  மொத்த மதிப்பெண்கள்: 75

### பகுதி - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 12×1=12
ii) மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1) ராக்கெட் ஏவுதலில் ............ விதி/கள் பயன்படுத்தப்படுகிறது.
அ) நியூட்டனின் மூன்றாம் விதி ஆ) நியூட்டனின் பொது ஈர்ப்பியல் விதி
இ) நேர்கோட்டு உந்தமாறாக் கோட்பாடு ஈ) அ மற்றும் இ

2) கிலோவாட் மணி என்பது எதனுடைய அலகு?
அ) மின்தடை எண் ஆ) மின்கடத்துதிறன் இ) மின்ஆற்றல் ஈ) மின்திறன்

3) செயற்கை கதிரியக்கத்தினைக் கண்டறிந்தவர்
அ) பெக்கொரல் ஆ) ஐரின் கியூரி இ) ராண்ட்ஜன் ஈ) நீல்ஸ்போர்

4) இரசக்கலவை உருவாக்கலில் தேவைப்படும் முக்கியமான உலோகம் ............
அ) Ag ஆ) Hg இ) Mg ஈ) Al

5) இருமடிக் கரைசலில் உள்ள கூறுகளின் எண்ணிக்கை ............
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

6) எரிசாராயம் என்பது ஒரு நீர்ம கரைசல் - இதிலுள்ள எத்தனாலின் சதவீதம் ............
அ) 95.5% ஆ) 75.5% இ) 55.5% ஈ) 45.5%

7) உள்நோக்கிய சைலம் என்பது எதன் சிறப்புப் பண்பாகும்?
அ) வேர் ஆ) தண்டு இ) இலைகள் ஈ) மலர்கள்

8) இதயத்தின் இதயம் என அழைக்கப்படுவது ............
அ) SA கணு ஆ) AV கணு
இ) பர்கின்ஜி இழைகள் ஈ) ஹிஸ் கற்றைகள்

9) ............ ஹார்மோன் 'காலத் தூதுவர்கள்' என்று அழைக்கப்படுகிறது.
அ) ஆக்ஸிடோசின் ஆ) தைராக்சின் இ) அட்ரினலின் ஈ) மெலடோனின்

10) சின்கேமியின் விளைவால் உருவாவது ............
அ) சூஸ்போர்கள் ஆ) கொனிடியா இ) சைகோட் ஈ) கிளாமிடோஸ்போர்கள்

11) வாந்தியெடுத்தலைக் கட்டுப்படுத்தும் மையம்
அ) முகுளம் ஆ) வயிறு இ) மூளை ஈ) ஹைப்போதலாமஸ்

12) உலக புகையிலை எதிர்ப்பு தினம்
அ) மே 31 ஆ) ஜூன் 6 இ) ஏப்ரல் 22 ஈ) அக்டோபர் 2

### பகுதி - II

குறிப்பு: ஏவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14
(கட்டாய வினா - 22)

13) குவிலென்சு ஒன்றில் F மற்றும் 2F புள்ளிகளுக்கு இடையே பொருள் வைக்கப்படும்போது உருவாக்கப்படும் பிம்பத்திற்கான கதிர் வரைபடம் வரைக.

14) பாயில் விதியைக் கூறுக.

15) அ) செவியுணர் ஒலியின் அதிர்வெண் என்ன?
ஆ) எதிரொலிக்குத் தேவையான குறைந்தபட்ச தொலைவு என்ன?

16) எத்தனாயிக் அமிலம் எத்தனாலில் இருந்து எவ்வாறு தயாரிக்கப்படுகிறது. அவ்வினைக்கான சமன்பாட்டை எழுதுக.

17) அ) முயலின் பல் வாய்ப்பாட்டினை எழுதுக.
ஆ) முயலில் டையாஸ்டீமா எவ்வாறு உருவாகின்றது?

18) கொடுக்கப்பட்டுள்ள படத்தில் A, B, C, D ஆகிய பாகங்களை அடையாளம் காணவும்.




Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

19) இதய வால்வுகளின் முக்கியத்துவம் என்ன?

20) அல்லோசோம்கள் என்றால் என்ன?

21) மின்னணுக் கழிவுகள் எவ்வாறு உற்பத்தியாகின்றன?

22) 10 கூலும் மின்னூட்டத்தை ஒரு மின்சுற்றிலுள்ள இரண்டு புள்ளிகளுக்கு இடையே நகர்த்த செய்யப்படும் வேலை 100J எனில் அப்புள்ளிகளுக்கிடையே உள்ள மின்னழுத்த வேறுபாடு என்ன?

## பகுதி - III

**குறிப்பு: எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா - 32)** **7×4=28**

23) ராக்கெட் ஏவுதலை விளக்குக.

24) நல்லியல்பு வாயு சமன்பாட்டினை தருவி.

25) அ) டாப்ளர் விளைவு நடைபெற முடியாத இரண்டு சூழல்களைக் கூறுக.
ஆ) இசையரங்குகளின் மேற்கூரை வளைவாக இருப்பது ஏன்?

26) அ) உலோக அரிமானத்தை தடுக்கும் வழிகளைக் கூறுக.
ஆ) இரும்பு துருப்பிடித்தலுக்கான இரு காரணங்களைக் கூறுக.

27) அ) காற்றுள்ள சுவாசம் மற்றும் காற்றில்லா சுவாசம் வேறுபடுத்துக.
ஆ) சுவாச ஈவு என்றால் என்ன?

28) மூளையின் அமைப்பையும் பணிகளையும் விளக்குக.

29) அ) 'போல்டிங்' என்றால் என்ன? அதை எப்படி செயற்கையாக ஊக்குவிக்கலாம்?
ஆ) தைராய்டு ஹார்மோன் ஏன் "ஆளுமை ஹார்மோன்" என்று அழைக்கப்படுகிறது?

30) வட்டார இனத் தாவரவியல் என்பதனை வரையறுத்து அதன் முக்கியத்துவத்தை எழுதுக.

31) மழைநீர் சேமிப்பு அமைப்புகள் எவ்வாறு நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றன?

32) அ) $MgSO_4.7H_2O$ உப்பை வெப்பப்படுத்தும்போது என்ன நிகழ்கிறது?
ஆ) 180கி நீரில், 45கி சோடியம் குளோரைடைக் கரைத்து ஒரு கரைசல் தயாரிக்கப்படுகிறது. கரைபொருளின் நிறை சதவீதத்தைக் காண்க.

## பகுதி - IV

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3×7=21**
**ii) ஒவ்வொரு வினாவிற்கும் 7 மதிப்பெண்கள்.**
**iii) தேவையான இடங்களில் படம் வரைக.**

33) கூட்டு நுண்ணோக்கியின் அமைப்பையும், செயல்படும் விதத்தையும் விளக்குக.

**(அல்லது)**

அ) ஆல்பா, பீட்டா மற்றும் காமாக் கதிர்களின் பண்புகளை ஒப்பிடுக.
ஆ) வரையறு : ராண்ட்ஜன்

34) அ) நவீன அணுக்கொள்கையின் கோட்பாடுகளை எழுதுக.
ஆ) அணுக்கட்டு எண் வரையறு.
இ) வேறுபட்ட ஈரணு மூலக்கூறுகளுக்கு 2 எடுத்துக்காட்டு தருக.

**(அல்லது)**

அ) மீள்வினை மற்றும் மீளாவினைகளை வேறுபடுத்துக.
ஆ) 'A' என்ற திண்மச் சேர்மத்தை வெப்பப்படுத்தும்போது சிதைந்து 'B' மற்றும் 'C' என்ற வாயுவைத் தருகிறது. 'C' என்ற வாயுவை நீரில் செலுத்தும்போது அமிலத்தன்மையாக மாறுகிறது. A, B மற்றும் Cயைக் கண்டறிக.

35) அ) நீராவிப்போக்கு என்றால் என்ன? நீராவிப்போக்கின் முக்கியத்துவத்தை எழுதுக.
ஆ) இரத்தத்தின் பணிகள் ஏதேனும் நான்கினை எழுதுக.

**(அல்லது)**

அ) மதுவினால் உடல் நலத்திற்கு ஏற்படும் தீமையான விளைவுகளைக் கூறு.
ஆ) மெட்டாஸ்டாசிஸ் என்றால் என்ன?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com